**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி : 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

**பெறுநர்,**
ஆசிரியர்,

தேதி : 26.02.2026

**ஐயா,**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் TEMASEK உயிர் அறிவியல் ஆய்வகம், சிங்கப்பூர் இணைந்து நடத்திய வயல்விழா மற்றும் விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் TEMASEK உயிர் அறிவியல் ஆய்வகம், சிங்கப்பூர் இணைந்து நடத்தும் 25.02.2026 அன்று காலை 11 மணியளவில் திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுகாவில் உள்ள பருத்திக்கோட்டை கிராமத்தில் வயல் விழா மற்றும் விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வின் முக்கிய நோக்கமானது TEMASEK உயிர் அறிவியல் ஆய்வகத்தின் நிதி உதவியுடன் நடைபெற்று வரும் ஆராய்ச்சி பணிகளின் விளக்க உரையுடன் புதுமையான வேளாண் முறைகள் மற்றும் நிலையான வேளாண் தொழில் நுட்பங்களையும் வெளிப்படுத்துவதாக அமைந்தது.

இவ்விழாவில் பேராசிரியர் மற்றும் நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையத்தலைவர் முனைவர் P. முரளி அர்த்தனாரி வரவேற்புரை வழங்கிய பின்னர் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் முனைவர் R. தமிழ்வேந்தன் அவர்கள் இந்நிகழ்ச்சியை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்வில் TEMASEK உயிர் அறிவியல் ஆய்வகத்தின் நிதி உதவியுடன் 250 ஏக்கர் நெல் வயலில் ஆராய்ச்சி செய்யப்பட்டது. இந்த ஆராய்ச்சியானது முதல் பருவம் முடிந்து இரண்டாம் பருவம் தொடங்க உள்ள நிலையில் உள்ளது. முதல் பருவம் முடிந்த நிலையில் விஞ்ஞானிகளும், விவசாயிகளும் கலந்துரையாடும் நிகழ்வாக அமைந்துள்ளது.

மேலும் இந்நிகழ்வில் முனைவர் V . தவமணி, முனைவர் S. பவுல் செபஸ்டியன், முனைவர் E. பரமேஸ்வரி அவர்கள் திட்டத்தைப் பற்றி விளக்கவுரையும், முனைவர் P.செல்வம், முதன்மையர் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் குடுமியான்மலை, முனைவர் K. R. ஜெகன்மோகன், முதன்மையர் வேளாண் கல்லூரி ஈச்சங்கோட்டை, திருமதி. T. பாலசரஸ்வதி, வேளாண் இணை இயக்குனர், திருவாரூர்

மற்றும் இயற்கை வள மேலாண்மை இயக்குனர் முனைவர் P. பாலசுப்பிரமணியம் அவர்கள் சிறப்புரையும், நிதியுதவி வழங்கும் நிறுவனத்தின் சார்பாக முனைவர் கின்ஸ் வர்கீஸ் அவர்கள் விளக்கவுரை அளித்தார். இறுதி நிகழ்வாக இணை பேராசிரியர் முனைவர் P. கலைச்செல்வி, சுற்றுச்சூழல் அறிவியல் துறை அவர்கள் அனைவருக்கும் மனதார நன்றி தெரிவித்தார். விஞ்ஞானிகள், விவசாயிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**